**செய்தி வெளியீடு எண்:402** **நாள் : 07.08.2016**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.8.2016 அன்று தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான குடிமக்கள் தரவுகளை மின்னாக்கம் செய்து பாதுகாப்பான முறையில் நிர்வகிக்கும் வகையில் 30 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையத்தின் இணையதள பயன்பாட்டினை துவக்கி வைத்தார்கள். மேலும், 1 கோடியே 32 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பின் இணையதள பயன்பாட்டினை துவக்கி வைத்தார்கள்.

கடந்த 2013ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் உரையில், தேசிய மக்கள் தொகைப் பதிவு ஆவணத்திலிருந்து பெறப்படும் குடிமக்களின் உயிரியத் தகவலுடன் கூடிய தனிநபர் பற்றிய தகவல் தொகுப்போடு, ஆதார் எண்களை ஒருங்கிணைத்து, மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, மாநில அளவிலான குடிமக்கள் தரவுகளை மின்னாக்கம் செய்து பாதுகாப்பான முறையில் நிர்வகிக்கும் வகையில் 30 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையத்தின் இணையதள பயன்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இத்தகவல் தொகுப்பு மையம், அரசின் நலத்திட்டப் பயன்கள் முழுமையாக பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்யவும், சேவைகளைத் திறம்பட அளிப்பதற்கும், பொறுப்புகளைச் சரியாக வரையறுத்து, சீரிய முறையில் திட்டங்களை செயல்படுத்துவதை கண்காணிப்பதற்கும் அரசுக்கு பேருதவியாக இருக்கும். இந்த தகவல் தொகுப்பு மையத்தின் மூலம், பல்வேறு அரசுத் துறைகளின் தரவுத் தளங்களில் தேசிய மக்கள் தொகை பதிவேட்டில் உள்ள தரவுகளோடு ஒப்பிடப்பட்டு, அவற்றில் ஆதார் எண் பதிக்கப்படும். மேலும், ஆதார் எண்ணைப் பயன்படுத்தி மாநில அரசின் பல்வேறு நலத்திட்டப் பயனாளிகள் கண்டறியப்படுவர். அத்துடன் அரசுத் துறைகளின் தரவுத் தளங்களை ஆதார் எண் சார்ந்த தேசிய மக்கள் தொகை பதிவேட்டுடன் நிகழ்நேரத்தில் ஒருங்கிணைக்கப்படும். இந்த தொகுப்பு மையம் மூலம் மக்களுக்கான

சேவைகள் எளிதாகவும், நலத்திட்ட உதவிகளை நேரடியாகப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும்.

அரசின் பல்வேறு துறைகளில், துறை சார்ந்த முடிவுகளை எடுப்பதற்காக இடம் சார், அதாவது Spatial மற்றும் இடம் சாராத, அதாவது Non Spatial தரவுகளை சீராக இணைக்கும் புவிசார் தகவல்கள், அதாவது Geographical Information மிகவும் அவசியமானதாகும். இதனை நிறைவு செய்யும் வகையில், புவிசார் தகவல்களைக் கொண்ட ஒரு பொதுவான மின்னணு வரைபடக் காப்பக தளம் உருவாக்கப்படும் என்று 8.5.2013 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி, 1 கோடியே 32 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் உருவாக்கப்பட்டுள்ள புவிசார் தகவல்களைக் கொண்ட தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பின் இணையதள பயன்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

புவிசார் தகவல் அமைப்பின் மூலம், இடம் சார் மற்றும் இடம் சாராத தரவுகளை இணைத்து அரசு துறைகளின் பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்யவும், நிர்வகிக்கவும் இயலும். மேலும், அனைத்து துறைகளிடம் உள்ள புவிசார் தரவுகளை ஆய்வு செய்து தேர்ந்தெடுத்து அவற்றை தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்புடன் இணைக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட புவிசார் தரவுகளை, 42 புவிசார் அடுக்குகளாக தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பிற்கான இணையதள பயன்பாட்டில் இணைத்து தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் திரு. தா.கி. இராமச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.எஸ். நாகராஜன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 7.8.2016**